1968 ஆகஸ்ட் 22]

சென்னையிலுள்ள உணவகங்கள்

* 93 வினா.—திரு. எஸ். இராமச்சந்திரன் : மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திங்கட்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்களில் உணவு விடுதிகள் மூடப்பட வேண்டுமென்ற உத்தரவை நீக்க வேண்டுமென்று சென்னை நகர மக்களிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) திங்கட்கிழமைகளிலும் வியாழக்கிழமைகளிலும், சிற்றுண்டிச் சாலைகளும் உணவகங்களும் மூடப்பட வேண்டுமென்று எவ்வித ஆணைகளும் பிறப்பிக்கப் படவில்லை. எனினும், திங்கட்கிழமையிலும், வியாழக்கிழமையிலும் அவ்வுணவகங்களில் மாலை நேரங்களில் அரிசி போன்ற உணவுப் பண்டங்களைப் பரிமாறுவதற்குக் கட்டுப்பாடுகள் இருந்தன. இந்தக் கட்டுப்பாடுகளை நீக்கும்படி வேண்டி முறையீடுகள் பெறப்பட்டன.

(இ) 13—4—1967 முதல் இந்தக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்து இந்தியப் பேரரசிடமிருந்து ஏதேனும் மறுப்பு வந்ததா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நாட்டிலே இருக்கின்ற உணவுநிலைமை, நெருக்கடி காரணமாக, பஞ்சம், பற்றாக்குறை பிரதேசங்களுக்கு உணவுத் தானியங்களை அனுப்பும் முயற்சியாகத் தான் இந்த ஆணையை மத்திய அரசு பிறப்பித்தது. இந்த ஆணையைத் தளர்த்துவதுபற்றி உத்தேசமில்லையென்று மத்திய அரசு கூறியது. இது நமது மாநிலத்திற்கு அவசியமில்லாததால், இந்த ஆணையைத் தளர்த்திவிடுகிறோம் என்று மத்திய அரசுக்குத் தெரிவித்துவிட்டோம்.

திரு. நா. காசிராமன் : இதுபோலவே மற்ற எந்த எந்த மாநிலங்களில் இந்த உத்தரவைத் தளர்த்தியிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுபற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : இந்தக் கட்டுப்பாட்டின் காரணமாக உணவு தானியம் எவ்வளவு சேமிக்க முடிந்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கேள்வி பொதுத் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. விவரம் இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : அதுபோல விருந்துகளில் 25 பேர்களுக்கு மேல் உணவு அளிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இருக்கிறதே, அது நீக்கப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கலியாணம் என்றால் 50 பேர்களுக்குச் சாப்பாடு போடலாம், துக்க காரியங்களில் 25 பேர்களுக்குச் சாப்பாடு போடலாம் என்கிற உத்தரவு முந்திய சர்க்காரினால் போடப்பட்டது. கலியாண விருந்துகளில் 100 பேர்களுக்குச் சாப்பாடு போடலாம், துக்க காரியங்களில் 50 பேர்கள் வரையில் போடலாம் என்பதாக இப்போது இந்த அரசினால் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Whereas under the instructions of the Central Government hotels and restaurants in the Madras City were ordered to be closed on Mondays and Thursdays, does the Minister feel that consequent on this closure there would have been any appreciable saving of foodgrains?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Only to impress on the minds of the people that we have to conserve some foodgrains for the scarcity areas, it was done. It was done only as a gesture.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, மணவிழாக்களில் எதிர்பாராத வகையில் அதிகமான விருந்தாளிகள் வந்துவிடுகிற காரணத்தினால் அவர்களுக்கு எல்லாம் உணவு அளிக்க வேண்டிய கடமை இருக்கிறது. அப்படி உணவு அளிப்பது தமிழர்களுடைய பண்பாடாகவும் இருப்பதனால் இந்த அரசு அந்தக் கட்டுப்பாடு உத்தரவை ரத்து செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உத்தரவை ரத்து செய்வது பற்றி யோசிக்கக் கூடாது. நமக்கு உணவுப் பொருள் கிடைக்க வேண்டும் என்பதோடு மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும். பரந்த இந்த நாட்டில் எந்த ஒரு மூலைப் பகுதியிலும் பஞ்சம், பட்டினி இருக்கக் கூடாது, என்கிற மனிதாபிமான உணர்ச்சியுடன் இந்த விதிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : சர்க்கார் கட்டுப்பாடு இருக்கிறதே தவிர ஒவ்வொரு விருந்திலும் பல நூறு பேர்கள் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய ஒரு உத்தரவு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இதைப்பற்றி அரசு மீண்டும் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : உத்தரவு இருந்தாலும் மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதில்லை. இருந்தும் ஒரு மனிதாபிமான உணர்ச்சியோடு இந்தச் சட்ட திட்டங்களை நாமும் ஏற்று இந்தியாவின் உணவு இயக்கத்தில் நாமும் பங்கு கொள்ள வேண்டியிருக்கிறது.

1968 ஆகஸ்ட் 22]

திரு. என். துரைபாண்டியன் : பட்டிணத்திற்குப் படி அரிசி ரேஷன் கொடுக்கிறார்கள். சில கிராமங்களுக்கு அரிசி கொடுப்பதே இல்லை. அப்படி இருக்க அந்தக் கிராமவாசிகள் இந்த நூறு பேர் கட்டுதிட்டத்திற்கு உட்பட வேண்டுமென்று சொல்வது நீதிதானா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தச் சட்டதிட்டங்கள் ரேஷன், குடும்பக் கார்டு அமுலில் உள்ள பகுதிகளுக்குத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Price of second sort rice

* 94 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the Hon. Minister is aware of the fact that the subsidised second sort of rice is sold for Rs. 1.07 and not at Re. 1.00 per Madras measure?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தாங்கள் சொல்லுவது உண்மைக்கு முற்றிலும் முரணானது, முறையற்றது (சிரிப்பு). பேரவைத் தலைவரைச் சொல்லவில்லை. கனம் உறுப்பினர் கேட்ட கேள்விக்குச் சொல்கிறேன்.

The question is whether the Hon. Minister is aware that second sort rice is sold for Rs. 1.07. I say it is not a fact and it is most incorrect.

இத் திட்டத்தின்கீழ் சென்னையிலும், கோயம்புத்தூரிலும் ஒரு கிலோ அரிசி 66 பைசாவுக்குத்தான் விற்கப்படுகிறது. இதன்படி ஒரு படி (1.52 கிலோ) அரிசியின் விலை ஒரு ரூபாய்தான்.

THIRU K. VINAYAKAM : Whereas it has been the considered policy of the Government to dole out one measure of rice for one rupee, has the Minister taken steps practically to find out how much rice in terms of kilograms is necessary to make up one measure? Has he worked it out or does he depend upon the official report? I have actually purchased rice, transferred it to the Madras measure and calculated the price. It comes to Rs. 1.07. Will the Minister practically see it and then come before this House?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The hon. Member is under a misapprehension. He would have measured it in the Madras measure. The Madras measure which we are using in our villages is a dry capacity measure which is no longer legal after the introduction of the metric system. What the Member says is the heaped measure. What we now have is the metric system in which we do not heap the grains in a conical fashion. We have taken all the necessary steps to calculate the price. The Director of Statistics has computed on the basis of the figures obtained through the Agricultural Economics Research Centre, University of Madras, that 1.52 kgs. of rice on an average will be equivalent to 1 Madras measure (1520 grams). The Government are supplying only medium and coarse varieties of rice at